31.07.2025

O.S.No.191/2009

பி.வா.சா.2.திரு.சாந்தாராம் த.பெ.R.N.ராமாச்சாரி

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வழக்கு சொத்தின் சர்வே நம்பர் என்னவென்று எனக்கு தெரியும் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 1 ஆவணத்தை பற்றி எனக்கு தெரியும். பி.வா.சா.ஆ 1 ஆவணத்தில் என்ன என்ன சர்வே எண்கள் யார் யாருக்கு கிடைக்கப்பெற்றது என்ற விவரமும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் வாதிகளின் வகையறாவிற்கு ஒதுக்கப்பட்டுள்ள புஞ்சை மற்றும் நஞ்சை நிலங்களுக்கு உண்டான சர்வே எண்களும், பங்காளிகளுக்காக ஒதுக்கப்பட்ட புஞ்சை மற்றும் நஞ்சை நிலங்களுக்கு உண்டான சர்வே எண்களும் தனித்தனியாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதிகளில் வகையறா என்று சொல்வது வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் 15 முதல் 20 ஆகியோர்களை குறிக்கும் என்றால் சரிதான். பிரதிவாதிகள் 15 முதல் 20 வரையிலான வாதிகளின் வகையறாக்கள் இந்த வழக்கு தாக்கல் செய்யப்படும்போது தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை என்றும், அதன் பின்னிட்டு 15 முதல் 20 பிரதிவாதிகள் மனு செய்ததன் அடிப்படையில் இந்த வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான்.

2. இந்த வழக்கில் R.M.ராமச்சாரியின் மற்றொரு மகனான சுந்தர்ராஜமூர்த்தி மற்றும் 4, 5 வாதிகளின் தாயாரான சாரதா என்பவரும் பிரதிவாதிகளாக தங்களை சேர்க்ககேட்டு மனு தாக்கல் செய்து அந்த மனு நிலுவையில் இருக்கும்போது இருவரும் இறந்துவிட்டதால் இந்த வழக்கின் தரப்பனராக

சேர்க்க முடியவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 1 ஆவணம் தான் வாதிகள் மற்றும் வாதிகளின் வகையறாக்களான 15 முதல் 20 பிரதிவாதிகள் சேர்ந்து எழுதி கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 1 ஆவணத்தில் வாதிகளின் வகையறாவிற்கு என்ன என்ன சர்வே எண்கள் ஒதுக்கப்பட்டது என்று பி.வா.சா.ஆ 1 ஆவணத்தை பார்வையிட்டு சொல்ல முடியுமா என்றால் கஷ்டம்தான்.

3. எனக்கும் 1 ம் பிரதிவாதி, 2 ம் பிரதிவாதி, 3 ம் பிரதிவாதி, 6 ம் பிரதிவாதி, 7 ம் பிரதிவாதி, 8 ம் பிரதிவாதி, 9 ம் பிரதிவாதி ஆகிய அனைவருக்கும் வழக்கறிஞர் திரு. ராமசாமி என்பவர் தான் முன்னிலையாகிறார் என்றால் ஆமாம். நான் மற்றும் 1 ம் பிரதிவாதி, 3 ம் பிரதிவாதி, 6 ம் பிரதிவாதி, 7 ம் பிரதிவாதி, 8 ம் பிரதிவாதி, 9 ம் பிரதிவாதி ஆகிய எங்களுடைய எதிர்வாதம் வாதிகளுக்கு எதிராக ஒன்றுபோல் தான் உள்ளது என்றால் சரிதான்.

4. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் பக்கம் 4 ல் முனியசாமி வகையறாவிற்கு சர்வே எண்.161/3 செண்டு 33, சர்வே எண்.127/8 செண்டு 94, சர்வே எண்.124/10 செண்டு 44, சர்வே எண்.95/1 செண்டு 57 ஆகிய நிலங்கள் நஞ்சை நிலங்களாக பி.வா.சா.ஆ 1 ஆவணத்தில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.127/10 ஆனது தற்போது சர்வே எண்.127/12 ஆக மாறியுள்ளது என்றால் சரிதான்.

5. புஞ்சை நிலங்களான சர்வே எண்.107/3, 2 ஏக்கர் 8 செண்ட், சர்வே எண்.107/4 1 ஏக்கர் 7 செண்ட், சர்வே எண்.110/1 3 ஏக்கர் 51 செண்ட் ஆகிய சொத்துகள் முனியசாமி வகையறாவிற்கு அதாவது வாதிகளின் தாத்தாவிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. பி.வா.சா.ஆ 1 ஆவணத்தில் 2 வது அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.110/1 ல் ஏக்கர் 4 செண்டு 87 என்று

காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.110/2 ல் 7 செண்டு கிழக்கு பக்கத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.107/1 ல் 1 ஏக்கர் 47 செண்டு காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.107/2 ல் 8 ஏக்கர் 5 செண்டு காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7. மேற்படி பி.வா.சா.ஆ 1 ஆவணத்தில் 2 வது அயிட்ட சொத்து R.V.குப்புசாமி ஐயர் மற்றும் நாராயணசாமி ஆகியோர்களுக்கு ஒதுக்கப்பட்டதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாராயணசாமி என்பவர் மகன் தான் R.V.குப்புசாமி என்றால் சரிதான். வெங்கடசாமி என்பவர் R.V.குப்புசாமி என்பவரை தத்து எடுத்துள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கின் 4, 5 பிரதிவாதிகள் R.V.குப்புசாமி என்பவரது பேரகுழந்தைகள் என்றால் சரிதான். வழக்கு சொத்துகளில் 1 வது அயிட்ட சொத்துகளாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.95/1, சர்வே எண்.105/17, சர்வே எண்.107/3, சர்வே எண்.127/8, சர்வே எண்.127/12, சர்வே எண்.132/2, சர்வே எண்.212/26 சொத்துகள் பி.வா.சா.ஆ 1 ஆவணத்தின்படி வாதிகளுக்கும், வாதிகளின் வகையறாவிற்கு மட்டுமே தனித்து பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சொத்துகளை பொறுத்து பிரதிவாதிகளுக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரிதான்.

8. தாவா சொத்தின் 1 ம் இலக்க சொத்தான சர்வே எண்.107/1, சர்வே எண்.110/1, சர்வே எண்.110/2 ஆகிய சொத்துகள் மற்றும் 2 வது இலக்க சொத்தான சர்வே எண்.107/2 ஆகிய சொத்துகள் பி.வா.சா.ஆ 1 ஆவணத்தின்படி பிரதிவாதிகளின் முன்னோர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். **சாட்சி தானாக சொல்கிறார் சர்வே எண் தனக்கு**

**குழப்பமாக உள்ளது என்றும் பி.வா.சா.ஆ 1 ஆவணத்தின்படி A செட்டியூல் சொத்து வாதிகள் வகையறாவிற்கும், B செட்டியூல் சொத்து பிரதிவாதிகளின் வகையறாவிற்கு பாத்தியப்பட்டது என்று சொல்கிறார்.**

9. பி.வா.சா.ஆ 1 ஆவணத்தின்படி சர்வே எண்.110/1 ல் கீழ்புறம் 3 ஏக்கர் 51 செண்டு வாதியின் வகையறாக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அதனை அவர்கள் விற்றுவிட்டார்கள். பி.வா.சா.ஆ 1 ஆவணத்தின்படி சர்வே எண்.110/1 ல் மேல்புறம் 4 ஏக்கர் 87 செண்டு பிரதிவாதிகளின் முன்னோர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.110/1 ன் ஒரு பகுதி கீழ்புறம் 7 செண்டு சர்வே எண்.110/2 ஆக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.110/1 ல் மேல்புறம் 4 ஏக்கர் 87 செண்டு மற்றும் சர்வே எண்.110/2 ல் 7 செண்டு உட்பட பிரதிவாதிகளின் முன்னோர்களுக்கு 4 ஏக்கர் 94 செண்டு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

10. பி.வா.சா.ஆ 1 ஆவணத்தில் பிரதிவாதிகளின் வகையறாகளுக்கு ஒதுக்கப்பட்ட சர்வே எண்.107/1 1 ஏக்கர் 47 செண்டு, சர்வே எண்.110/2 ல் 7 செண்டு, சர்வே எண்.110/1 மேல்புறம் உள்ள 4 ஏக்கர் 87 செண்டு ஆகியவை பிரதிவாதிகள் முன்னோர்களால் வாதிகளின் முன்னோர்களுக்கு வாய்கராலாக விற்கப்பட்டுவிட்டது என்றால் தவறு. வாதிகளின் முன்னோர்களுக்கு விற்கபட்டபடியால் மேற்படி சொத்துகளை 80 ஆண்டுகளாக வாதிகளின் வகையறாக்கள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் தவறு. வாதிகளின் வகையறாக்கள் மேற்படி சொத்துகளை 80 ஆண்டுகளாக அனுபவித்து வருவதால் 1, 2, 3, 6, 7, 8, 9 பிரதிவாதிகளுக்கு மேற்படி சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றால் தவறு.

11. 4, 5 பிரதிவாதிகள் மேற்படி சொத்துகள் வாய்கராலாக வாதிகளின் வகையறாக்கள் வாங்கிவிட்டதாக சொல்லியுள்ளார் என்றால் அது தவறு. 6 ம் பிரதிவாதியான R.R.சிவக்குமார் என்பவரது தகப்பனார் 1991 ஆம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். 4, 5 பிரதிவாதிகளின் தகப்பனாரான R.K.சுப்பிரமணி என்பவர் 1969 ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது தகப்பனார் R.N.ராமாச்சாரி 1980 ஆம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். வாதிகளின் தகப்பனார் R.M.ராமாச்சாரி 1986 ஆம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது தகப்பனார் R.N.ராமாச்சாரி காலத்திலேயே வாதிகளின் தகப்பனாரான R.M.ராமாச்சாரி என்பவருக்கு வாய்கராலாக கிரையம் கொடுக்கப்பட்டுள்ள விவரம் தெரிந்து நான் தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் இல்லை.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.